[1971 ஜூலை 10

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்போது இரண்டு கண்டக்டர்கள் இருக்கிறார்கள். தொடர் வண்டிகள் இன்னும் நீளம் அதிகமானால் அந்த முறையைப்பற்றி ஆராயலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தமிழகத்தில் ஓடும் பஸ்கள்தான் அதிகமான புகை விடுகின்றன என்று எஞ்சினியர் ஒருவர் சொன்னார். அந்தக் கெட்ட பெயரைத் துடைக்க நமது அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒருவேளை பஸ்ஸில் செல்லுகின்றவர்கள் புகையைப் பார்த்துச் சொல்லியிருக்கலாம்.

Congestion in buses in Madras City

* 192 Q.—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to ease the congestion in the State Transport buses in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த விவர அறிக்கையில் 917 பஸ்கள் ஓடிக் கொண்டிருந்ததற்குப் பதிலாக 63 பஸ்கள் மேலும் விடப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "பீக் ஹவர்சில்" பஸ் புறப்படும் இடத்தில் இருந்து ஒரு பஸ் புறப்படுவதற்குப் பதிலாக இரண்டு பஸ்களாகப் புறப்படுவதற்கும், ஸ்டான்டு கண்டக்டர்கள் தவிர ஒவ்வொரு பஸ்ஸிலும் இரண்டு கண்டக்டர்கள் இருந்து அந்த பஸ்கள் துரிதமாகச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 63 பஸ்கள் அதிகமாக விடப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் இணைப்புப் பேருந்துகள், மாடிப் பேருந்துகள், நின்று பயணம் செய்யும் பேருந்துகள், மகளிர் களுக்கான சிறப்புப் பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது பரீட்சார்த்தமாக எக்ஸ்ட்ரா கண்டக்டர் ஒருவர் நெரிசல் நேரத்தில் நியமிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் இன்னொரு திட்டமும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. குறிப்பாக சென்னை மாநகரத்தைப் பொருத்தவரை பயணிகள் ஏறுவது, இறங்குவது, விபத்துக்கள் ஏற்படுவது ஆகியவற்றைப்பற்றி ஆராய்ந்து 50 இடங்களை நெரிசல் நிறைந்த பகுதியாகக் கருதி அந்த 50 இடங்களிலும் கம்பல்சரி ஸ்டாப்பிங் சிஸ்டம்—பயணிகள் ஏறினாலும் ஏறாவிட்டாலும், இறங்கினாலும் இறங்காவிட்டாலும் பஸ்கள் அந்த இடங்களில் கட்டாயம் நின்றுதான் செல்ல வேண்டு மென்ற வகையில் ஒரு திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது. மக்களும் வரிசையாக நிற்க வேண்டும். வரிசையில் நிற்கும்போது முன்னரே டிக்கட்டுகளும் கொடுக்க இருக்கிறார்கள். கியூவுக்காக ரெயிலிங்ஸ் போடவும் ஏற்பாடு செய்வதாக இருக்கிறது. பஸ்ஸை ஓட்டுகின்ற தொழிலாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்களைக் கலந்து

@ 681-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 ஜூலை 10]

பேசியிருக்கிறோம். அந்த ஸ்டாப்புகளில் கட்டாயம் நிற்க வேண்டு மென்று கூறியிருக்கிறோம். பஸ் அந்த ஸ்டாப்பில் நிற்க வேண்டிய இடத்தில் நிற்கும். அப்படி நிற்கும்போது பின்னால் வரக்கூடிய பஸ்கள் நடுரோட்டைத் தாண்டிச் செல்லக் கூடாது. வரிசையில் நிற்கும் மக்களை ஏற்றிச் செல்லும் வகையில் முன் பஸ் சென்றவுடன் அந்த இடத்தில் வந்து ஓரமாக பஸ்ஸை நிறுத்த வேண்டும். இந்தத் திட்டத்தைப் பரிட்சார்த்தமாக சென்னை நகரத்தில் 50 இடங்களில் கையாள வேண்டுமென்று இந்தச் சர்க்கார் கருதுகிறது. தொழிலா ளர்களும் ஒத்துழைப்புத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கொஞ்சம் காலந்தான் கூட்டித் தரவேண்டுமென்று சொல்லுகிறார்கள் இந்த முறை வெற்றி பெறுமானால் இதர இடங்களுக்கும் பயன் படுத்தலாம். இதனால் ஓரளவு மன நிறைவு ஏற்படுமென்று கருது கிறேன்.

DR. H. V. HANDE : About a year or 1-1/2 years ago when the Hon. Thiru Sadiq Pasha was Minster for Transport, a hue and cry was raised in regard to inconvenience caused to passengers and a conference was convened and a press statement was given later on and it was also fortified by a statement in the House that 200 to 300 new buses would be installed and the amount of money earmarked was also quoted. May I also know whether Government has now taken a different stand and whether assurances already given by Hon. Minister Thiru S. J. Sadiq Pasha would be pursued or would not be given effect to?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Assurances given by this Government are always honoured.

திரு. கே. டி. கே. தங்கமணி : பம்பாய் போன்ற நகரங்களில் சில குறிப்பிட்ட பஸ்கள் லிமிடெட் ஸ்டாப் என்று போட்டு ஓட்டு கிறார்கள். நெரிசலான நேரத்தில் ஆபீசுக்கோ, ஆபீஸ் விட்டுச் செல்லக்கூடிய நேரத்திலோ நிச்சயமாக நிற்க வேண்டுமென்ற இடங்களைக் குறிப்பிட்டு லிமிடெட் ஸ்டாப் முறையில் பஸ் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது நல்ல யோசனை. அது கருத்தில் கொள்ளப் படும். பம்பாய் நகரத்தைப் பொறுத்தவரை என்ன சவுகரியம் என்றால், அங்குள்ள பயணிகள் வரிசையில் நல்ல முறையில் பொறுமையாக நின்று வண்டிகளில் ஏறுகிறார்கள். இங்குள்ள கஷ்டங்கள் அவர்களுக்குக் கிடையாது. லிமிடெட் ஸ்டாப் பஸ் ஓட்டவேண்டுமென்ற யோசனை நல்ல யோசனை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : பொதுவாக பெண்கள் கல்லூரிகள் இருக்கும் பஸ் ஸ்டான்ட்களில்தான் அதிகம் நெரிசல் காணப்படுகிறது. ஆகவே, அதைத் தவிர்க்க அந்த மாணவிகளும் பெண்களுக்காக இருக்கிற பஸ்களில்தான் ஏற வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாணவிகளைக் கட்டாய படுத்துவது என்பது சர்க்காருக்கு முறையாக இருக்காது. அது மாணவிகள் விருப்பத்தைப் பொறுத்ததாகும், இப்போதே அவர்

களுக்கு என்று தனியாகப் பிரயாணம் செய்வதற்கென பெண்களுக்கு தனி வண்டிகளும் இருக்கின்றன. இப்போது பெண்களுக்கு என்று தனிப் பகுதிகளைக் கொண்ட வண்டிகளும் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) கவன ஈர்ப்பு

குமரி மாவட்டத்தில் மிடாலம் என்ற இடத்தில் ஏற்பட்ட கடலரிப்பினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகள்

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter or urgent public importance, namely, the violent sea erosion at Midalam, Vilavancode Taluk, Kanyakumari district, on 26th June 1971 resulting in the destruction of the preventive wall and consequent difficulties to the fishermen.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: On the evening of June 26, 1971, due to a violent storm which lasted for about two hours, the anti-sea erosion works which were executed in Midalam village of Vilavancode taluk, Kanyakumari district got damaged partially. To prevent the sea erosion at this place, protective measures were taken up five months back by driving two rows of palmyrah piles for a length of about 1,500 feet and the annular space was dumped with stones, the total cost of the work being about one lakh of rupees. It is reported that due to the storm, one row of piles for a length of about 400 feet together with the stones dumped for this length were washed away. It is reported that the approximate cost of the damage will be about Rs. 5,000 and action has been taken to restore the piles in the damaged portion. It is also reported that the damage has occurred only to a length of 400 feet and that the fishermen have not been put to any inconvenience.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் காண்ட்ராக்டர் சரியான முறையில் வேலை செய்யாத காரணத்தினால் இந்தப் பழுது ஏற்பட்டது என்று அங்கு கூறப்படுகிறது. அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா? அப்படி இருந்தால் அந்தக் காண்ட்ராக்டர் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு புகார் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் அப்படி ஒரு புகாரைத் தருவார்களேயானால் நிச்சயமாக அது பரிசீலிக்கப்பட்டு குற்றம் இருக்குமானால் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.